# கலைஞர் கலாபூஷணம் ஐ.சிவபாதம்

## ஆழத்து முத்துக்கள் 71

- ஏ.எஸ். மகாலிங்கம் -

பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, மத்தளம், சல்லிகை, கரடிகை, திமிலை, குடமுழா, தக்கை, களப்பறை, தமருகம், தண்ணுமை, தடாரி, அந்தரி, முழவு, சந்திர வளையம், மொந்தை, முரசு, கண்விடுதூம்பு, நிசாரணம், துடுமை, சிறுபறை, அடக்கம்,



தகுனிச்சம், விரலேறுபாகம், உபாங்கம், நாழிகைப்பறை, துடி, பெரும்பறை என அக் காலத்து தோற்கருவிகளை வரிசைப்படுத்துகின்றார் சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார். பிறசங்க இலக்கியங்களில் 30க்கும் மேற்பட்ட தோற்கருவிகள் இடம் பெற்றுள்ளன.

மரம் மற்றும் தோல் வடிவ வார்ப்பில் சிற்சில வேறுபாடுகளைக் கொண்டவை இக்கருவிகள். ஒவ்வொன்றும் ஒவ்வொரு இசையைத் தருபவை. இசையை சிதைக்காமல் குவிக்கும் மரங்களையும் அடியைத் தாங்கி ஒலியை உமிழும் விலங்குகளின் தோலையும் இனங்கண்டு, அவற்றை வடிவப் படுத்தி, வார்த்து இசைத்த நம் முதாதையர்களின் அறிவு வியக்க வைக்கின்றது என்று குங்குமம் சஞ்சிகையில் குறிப்பிட்டிருந்தார்கள்.

மேல் கூறப்பட்ட தோற்கருவிகளில் பலவற்றை இசைக்கும் திறன் பெற்றவர் அளவெட்டியூர் கலாபூஷணம் ஐயாத்துரை சிவபாதம் அவர்கள்.

அளவெட்டி இலங்கையில் வடபால் உள்ள கிராமம். கீரிமலைக்கு அண்மையில் தென் புறமாக உள்ள இக்கிராமம் வடக்கு, தெற்கு, மேற்கு, கிழக்கு, மத்தி எனக் கிராமங்களில் பரந்து விரிந்தது. இந்த கிராமத்திற்கு பேரும் புகழும் சேர்த்த பல கலைஞர்கள், எழுத்தாளர்கள், பேச்சாளர்கள், அறிஞர்கள் எனப் பலர் வாழ்ந்த கிராமம்.

இந்த கிராமத்தின் வடக்கே 'கரகம்' ஐயாத்துரை அவர்கட்குச் சிவபாதம் 21-09-1940ம் ஆண்டு புத்திரனாகப் பிறந்தார். தந்தையாரும் சிறந்த கலைஞர். கரகம், காவடி ஆடுவது, பழக்குவது என தனது திறமையை பிறக்கும் பயன்படுத்தினார். திரு.ஐயாத்துரை அவர்களும் தோல் வாத்தியமான உடுக்கை எனப்படும் உடுக்கு வாசிப்பதில் சிறந்து விளங்கினார். ஐ.சிவபாதம் அவர்களின் இந்த அடியூற்று காரணமாக அவர் தோல் வாத்தியங்களான உடுக்கு, தவில், தபேலா, மிருதங்கம், கெஞ்சிரா, கடம், கொன்னக்கோல், டிறம் ஆகிய சகல வாத்தியங்களையும் திறம்பட வாசிக்கும் ஆற்றல் பெற்றிருந்தார்.



க. குணராசா (செங்கையாழியான்) அவர்கள் சிவபாதம் அவர்களுக்கு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கின்றார்.

இவர் ஆரம்பத்தில் ஆறுமுகம் என்பவரிடமும் கலாசூரி வ.இரத்தினம் என்பவரிடமும் மிருதங்கம் பயின்று பின்பு இந்தியா - திருவாரூரில் நாகராஜன் என்பவரிடம் முறைப்படி மிருதங்கம் கற்றுக்கொண்டார். தவில் மேதை தெட்சணாமூர்த்தி அவர்களிடம் தவில் வாத்திய கலையை கற்றுக்கொண்டார்.

இலங்கையின் இசைக் கலைஞர்களான என்.சண்முகரத்தினம், எஸ். சண்முகராகவன் இந்திய கலைஞர்கள் சித்தூர் சுப்பிரமணியப்பிள்ளை, ஆ. தியாகராஜன், கல்லாறு கிருஷ்ணபாகவதர், மகாராஜபுரம் சந்தானம், பண்ணிசைப்புலவர் ராஜசேகரம், ஆகியோருக்கு அணிசேர் கலைஞராக மிருதங்கம் வாசித்துள்ளார். அத்துடன் இலங்கையின் புகழ் பெற்ற கலைஞர்கள் என்.கே. பத்மநாதன், அளவெட்டி பாலகிருஷ்ணன், சிதம்பரநாதன், நாகேந்திரம், பஞ்சமூர்த்தி கானமூர்த்தி சகோதரர்கள், கோண்டாவில் பாலகிருஷ்ணன், ஆறுமுகம்பிள்ளை, சாத்தூர் கிருஷ்ணன் ஆகியோருக்கும் தவில் வாசித்துள்ளார்.

இலங்கை வானொலியிலும் இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்திலும் உயர்தர கலைஞர் என்ற தகுதியுடன் பல காலம் பணியாற்றியுள்ளார். அடையாறு இசைப்பாடசாலை அதிபர் சந்தியா வந்தனம் ஸ்ரீனிவாசராவ், மகாராஜபுரம் சந்தானம், (சுன்னாகம் இராமநாதன் நுண்கலைக் கல்லூரியின் முன்னாள் அதிபர்) ஆகிய சிறந்த கலைஞர்கட்கு பக்கவாத்தியக் கலைஞராக பங்குபற்றியதைத் தனது மறக்க முடியாத நிகழ்வாகக் கருதுபவர்.

பார்வதி சிவபாதம் என்ற பெயரில், இசைக் குழு ஒன்றினை நடத்தியுள்ளார். 'சிவபாதம் கலையகம்' என்ற பெயரில் கிளிநொச்சியில் கலைப்பயிற்சி நிறுவனமும் இயங்கி வந்தது.

இவரது மனைவி பார்வதி சிவபாதமும் அந் நாட்களில் புகழ் பெற்ற சிறந்த பாடகி, பார்வதியும் கலைப்பரம்பரையைச் சேர்ந்தவரே! அவரது தயார் சிறந்த பாடகி. நல்ல நடிகை. தந்தை, 'ஹார்மோனியம் பொன்னுச்சாமி' என்று இசைக்கருவியுடன் இணைந்து பெயர் வெற்றிருந்த பொன்னுச்சாமி அவர்களும் அன்று புகழ் பெற்ற கலைஞராகத் திகழ்ந்தவர். பார்வதி சிவபாதம் பல்வேறு இசைக்குழுக்களிலும் பாடியவர். அத்தோடு இசைப்பேழைகள் பலவற்றில் இவரது பாடல்கள் இடம்பெற்றுள்ளன. அவற்றுள் மகாஜன சபை வெளியிட்ட 'நிலாக்காலம்' என்ற இசைப்பேழை குறிப்பிடற்குரியது. இலங்கை வானொலியில் இடம்பெற்ற மெல்லிசைப் பாடல்களில் இவர் பாடிய 'மல்லிகைப் பந்தலில்' என்ற பாடல் மறக்கமுடியாதது. ஜெர்மனி உள்ளிட்ட பல வெளிநாடுகளிலும் இவரது இசைக்கச்சேரிகள் நடைபெற்றுள்ளன.

பார்வதியின் மெல்லிசைக் கச்சேரி என்றால், கலைவிழாக்கள், திருவிழாக்கள் என்று அன்றாடம், ஏன் ஒரே இரவில் கூட பல இடங்களிலும் தொடர்ந்து நடந்து கொண்டே இருக்



பார்வதி சிவபாதம்

கும் பக்கவாத்தியக் கலைஞர் கணவன் சிவபாதம் தான், சில நேரங்களில் இடைவேளைகளை நிரப்ப தனி ஆவர்த்தனம் செய்வார்கள். ஒருமுறை சுன்னாகம் ஐயனார் கோவிலில் அவர் செய்த கொன்னக்கோல் நிகழ்ச்சியை என்றும் மறக்க முடியாது. இவரது மகனும் தவில் கலைஞரே.

அன்னாட்களில் நானும் என் நண்பர்களான சுந்தரலிங்கமண்ணர், சின்னராசண்ணர், வாமதேவன், நாகராஜா, ஆலாலம் ஆகியோர் ஆளாளுக்கு ஒவ்வொரு சைக்கில்களில் ஊர் சுற்றித் திருவிழாப் பார்த்த காலங்களில் எல்லாம், திருமதி பார்வதி சிவபாதம் அவர்களின் மெல்லிசைக் கச்சேரியை நாம் தப்ப விட்டது கிடையாது. அது மாங்குளம் மாவடிச் சித்தி விநாயகர் என்றால் என்ன அளவெட்டி கும்பிளாவளைப் பிள்ளையார் என்றால் என்ன, எவ்வளவு தூரம் என்றாலும் அங்கு சென்று அவர்களின் கச்சேரிகளை ரசித்துப் பார்த்த நாட்கள் என்றும் நினைவில் நீங்காதவை.

திரு.சிவபாதம் அவர்களின் கலைச்சேவையைப் பாராட்டி, தலைவர் அமிர்தலிங்கம் அவர்களால் 'லய வாத்திய திலகம்' எனும் பட்டமும், இணுவில் பண்டிதர் பஞ்சாட்சரம் அவர்களின் அமைப்பினால் 'பல்லியல் கலைமணி' எனும் பட்டமும், வலிவடக்குக் கலாச்சார பேரவையினால் 'கலைச்சுடர்' என்னும் பட்டமும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார். அத்துடன் 15.12.2008ல் 'கலாபூஷணம்' விருதும் இவருக்கு வழங்கப்பட்டது.

கடந்துபோன காலத்தின் மறக்கப்படமுடியாத கலைத்தம்பதியினராக திரு.சிவபாதம் - திருமதி பார்வதி சிவபாதம் திகழ்ந்தார்கள்.



mahalingam.as@thaiveedu.com